# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.

தொலைபேசி: 044–22201337

மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


***********

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**

**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)**

***********

**முறையீட்டு மனு எண்.059/2019/பே**

**ஆணை நாள்: 15–07–2019**

திரு. வை.ராமச்சந்திரன்,
த/பெ திரு.வைத்தி,
எண்.19, இரட்டை பிள்ளையார் கோவில் தெரு,
மேல் புவனகிரி,
கடலூர் மாவட்டம். -- முறையீட்டு மனுதாரர்.

செயல் அலுவலர்,
புவனகிரி பேரூராட்சி,
கடலூர் மாவட்டம். -- எதிர் மனுதாரர்.

**ஆணை.**

கடலூர் மாவட்டம், புவனகிரி பேரூராட்சி, எண்.19, இரட்டை பிள்ளையார் கோவில் தெருவினைச் சேர்ந்த திரு.வை. ராமச்சந்திரன், த/பெ திரு.வைத்தி, முறையீட்டு மனுதாரின் 02.04.2019 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 03.04.2019 அன்று பெறப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில், கடலூர் மாவட்டம், புவனகிரி பேரூராட்சியில் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு நிதியில் பெறப்பட்ட தொகையினை முறையாக பயன்படுத்தவில்லை எனத் தெரிவித்து தனது முறையீட்டு மனுவினை சமர்ப்பித்துள்ளார்.

08.05.2019 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணையில் முறையீட்டு மனுதாரரின் 02.04.2019 முறையீட்டு மனுவில் செயல் அலுவலரின் மீதான குறிப்பான புகார்கள்/குற்றச்சாட்டுகள் குறித்து இம்முறைமன்ற நடுவத்திற்கு தெரிவிக்காமல் " பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியினை பாழ் செய்தது " என மட்டும் குறிப்பிட்டு பதில் மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளதால் மனுதாரரது / புகார் குற்றச்சாட்டுகள் அடங்கிய மனுவினை குற்றச்சாட்டுக்களுக்கான ஆதாரங்களுடன் சமர்ப்பிக்க முறையீட்டு மனுதாரருக்கு ஆணையிடப்பட்டது. மனுதாரர் விசாரணையின்போது குறைபாடான மனு என ஒத்துக் கொண்டார்.

இந்நிலையில் மனுதாரரது மேற்படி 02.04.2019 நாளிட்ட மனு குறைபாடுடைய மனு என தள்ளுபடி செய்து ஆணையிடப்படுகிறது.

2019–ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 15–ஆம்நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–

செயலாளர். 17/7/2019

பெறுநர்
திரு. வை.ராமச்சந்திரன்,
த/பெ திரு.வைத்தி,
எண்.19, இரட்டை பிள்ளையார் கோவில் தெரு,
மேல் புவனகிரி,
கடலூர் மாவட்டம்.

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனி எழுத்தர்
முறைமன்ற நடுவ செயலரின் தனி எழுத்தர்.
உதவிப் பிரிவு அலுவலர்(ஊராட்சிகள்) தகவலுக்காக.